**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. SRI VENKATESHWARA BLUE METALS LEASE OVER AN EXTENT OF 3.00.0 HA LOCATED AT SF.NO.202/1 (PART – A), KONDAPPANAYANAPALLI VILLAGE, KRISHNAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 08.10.2024 AT 11.00 AM M/S. SRI SRINIVASA KALYANA MANDAPAM, SRI RAMAR KOVIL (ST), BOODIMUTLU (VILL), VEPPANAPALLI (PO), KRISHNAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| S.No | Name | | Designation |
|---|---|---|---|
| 1 | Thiru.N.Sajahan | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M. Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. V. Deenadayalan | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. A.M.Murugan | : | The Proponent, M/s. Sri Venkateshwara Blue Metals |
| 5 | Thiru.R.Ilavarasan | : | EIA Consultant, M/s. Geo Tech Mining Solutions, Dharmapuri |
| | Public | : | 70 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Sri Venkateshwara Blue Metals, SF.No.202/1 (Part – A), lease over an extent of 3.00.0 Ha, Kondappanayanapalli Village, Krishnagiri Taluk, Krishnagiri District is

required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority - Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinamalar" and "The New Indian Express" dated 05.09.2024 and bit notices regarding public hearing was distributed to the public of Gurubarapalli Village, Guntarapalli Village, Beemanapalli Village, Kuchiparai Panchyat, Marachandram Panchyat, Kondapanayanapalli Panchyat, Bettapanur, Pullaiyur, Chennasandiram Vilage with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, on behalf of the proposed M/s. Sri Venkateshwara Blue Metals EIA Consultant Thiru.R.Ilavarasan, M/s. Ecotech Labs Pvt Ltd of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru. Saravanan, Kondanayanapalli Village:**

Thiru. Saravanan said that my house is located about five hundred meters from the quarry. We are affected by this quarry heavily. Quarry operations generate dust emanation, and those particles that settle on my cultivable land also affect the coconut saplings. Cows were died from eating polluted grass. We also get shortness of breath due to the dust. We complained about this to the quarry management. But they did not redress it. When it rains, dust emanates and settles on the surface of the streams, thus polluting and affecting streams and groundwater. Also, it stinks. Due to these, we are affected by fever and headache. Our livelihood is also affected. Therefore, we object to this quarry project.

2. **Thiru. Dhasaradhan, Kondanayanapalli Village:**

Thiru. Dhasaradhan said that due to the operation of the quarry, dust is generated, settles on the leaves. Our coconut farm and mango farm are affected by the dust. Therefore, this quarry project is not required and should not be allowed. Due to blasting carried out in the quarry, there are cracks in the nearby houses. Hence, he has intended to file a petition against the quarry. Further, he requested that the quarry should work within the legal framework of the government.

3. **Thiru. Eshwaran, Kondanayanapalli Village:**

Thiru. Eshwaran has said that our land is affected by dust that emanates from quarry activity. Sericulture and mango farms have been affected, and we suffered heavy losses. Merely relying on dry trees doesn't yield any benefits which instead leads to significant losses. Further, due to blasting carried out in the quarry, stones will fall on our land. How can this be prevented by the green net arrangement? So, he asked the quarry management to operate the quarry in a way that does not affect his farmland.

**4. Thiru. Markandan, Kondanayanapalli Village:**

Thiru. Markandan has requested the quarry management to control the dust emanation during the quarry operation, and while blasting in the quarry, he asked them to blast without making heavy noise. Quarry proponents are doing business by investing several crores. Further, he said that the quarry management is doing this business by investing several crores; therefore, he requested them to rectify the above concerns and to operate the quarry.

**5. Thiru. Senthilkumar, Kondanayanapalli Village:**

Thiru. Senthilkumar has said that there is always a problem for us due to blasting carried out in the quarry. But when we ask the reason for it, they do not answer properly. Also, children are affected due to vibration in houses due to blasting. He said his house is located a hundred meters away from the quarry. Therefore, he objects to this quarry project.

**6. Thiru. Perumal Raj, Kondanayanapalli Village:**

Thiru. Perumal Raj has said that he has a flower garden and does farming nearby the quarry. At present, there is no proper output from the garden and farmland due to the nearby quarry operation. Therefore, he requested to cancel the quarry activity nearby his farm.

**7. Thiru. Murugan, Mullaiyur Village:**

Thiru. Murugan has said that he has calves in his house; they are affected by the quarry, and other cows do not eat the grass there because due to dust pollution and do not drink the water from the stream. Earlier, cows used to give ten litters of milk; now they give only five litters of milk. He also informed that they are suffering from fever due to the quarry operation and requested not to grant permission to this project.

8. **Thiru. Parasuraman, Kondanayanapalli Village:**

Thiru. Parasuraman has said that due to blasting in the quarry, flowers are falling in our flower garden with high vibration. Also, mango trees are affected. Wind blowing throughout the month of July-August (Aadi) causes the dust to settle in the nearby tree leaves, leading to white appearance. He said dust settles in the residences too.

9. **Thiru. Munusamy, Kondanayanapalli Village:**

Thiru. Munusamy has said that here the presentation shows wind blows in a north-south direction. But the wind blows in all directions. He also said that during the month of July-August (Aadi), sand dust comes into the village due to quarry activity.

10. **Thiru. M. Muniraj, Kondanayanapalli Village:**

Thiru. M. Muniraj has said that we have submitted a petition to the District Collector and the Tamil Nadu Pollution Control Board office regarding the damage to my mulberry plantation caused by the quarry. But the village administration officer and the surveyor have given a report that there is no damage to our mulberry plantation. But, when the quarry is nearby, how can it not be affected? So, no quarry should operate here. If we decide to file a petition against the quarry, they erect a green net for the name's sake. However, when the blasting is carried out, the stones fall beyond the net, and the dust also escapes from the net. Also, the houses are vibrating, and bore wells are affected due to blasting. Agriculture is the only source of livelihood for the villages of Kondanayanapalli, Chennachandram, and Mullaiyur. But we are affected by the quarry operation. The blasting carried out in the quarry also affects the sericulture. When the government intends to set up a quarry in the poramboke land, it should not be granted without consulting the nearby farmers. We have been fighting for the same problem for about three to four years. All the villagers are affected by this quarry operation. So, he objects to this quarry project in his village.

**11. Thirumathi. Lakshmi, Kondanayanapalli Village:**

Thirumathi. Lakshmi has said that children are getting affected by nearby quarry. There is more dust and noise generated due to quarry operation. Also, the air and water are highly polluted.

**12. Thiru. Bojairaj, Kondanayanapalli Village:**

Thiru. Bojairaj has said that my house is located fifty meters away from the quarry. We are having mango farms, coconut farms, and doing agriculture and cattle rearing. All farmers are affected by quarry operations. Therefore, he objects to this proposed quarry project.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority -Tamilnadu.

Further, no petition was received on the proposed M/s. Sri Venkateshwara Blue Metals Quarry project during the public hearing meeting.

Further, it is informed that 45 number of petitions were received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Revenue Divisional Officer**<br>**Krishnagiri** | **District Collector**<br>**Krishnagiri** |

**திி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.202/1 (பகுதி–A), கொண்டப்பநாயனப்பள்ளி கிராமம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 3.00.0 ஹெக்டேர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 08.10.2024 அன்று ஸ்ரீ ராமர் கோயில் தெரு, போடிமுட்டலு கிராமம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள திி/ள். ஸ்ரீ சீனிவாச கல்யாண மண்டபம், முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.நா. ஷாஜகான் | : | வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. மு. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.வெ. தீனதயாளன் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திரு. A.M. முருகன், | : | உரிமையாளர்<br>திி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு. R. இளவரசன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>திி/ள். ஜீயோ டெக் மைனிங் சொலியுசன்ஸ், தருமபுரி. |
| | பொதுமக்கள் | : | 70 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் திி/ள். ஸ்ரீ

வெங்கடேஸ்வரா ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 05.09.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், குருபரப்பள்ளி, குந்தாரப்பள்ளி, பீமனப்பள்ளி பஞ்சாயத்து, குப்பச்சிபாறை பஞ்சாயத்து, மாரசந்திரம் பஞ்சாயத்து, கொண்டப்பநாயனப்பள்ளி பஞ்சாயத்து, பேட்டப்பனூர், புள்ளையூர், செண்டசந்திரம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும், இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடு–க்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரப்

ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சார்பாக, திரு. R. இளவரசன், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர், தி/ள். ஜீயோ டெக் மைனிங் சொலியுசன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. சரவணன், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. சரவணன் அவர்களின் வீடானது குவாரியிலிருந்து 500 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதால் மிகவும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்தார். குவாரியின் செயல்பாட்டால் நிலத்தில் அதிகமாக தூசு விழுகிறது. இதனால், தென்னங்கன்றுகள் பாதிப்படைகின்றன. மூச்சுத் திணறலும் ஏற்படுகிறது. மாடுகள், தூசுகள் நிறைந்த புற்களை உண்டதால் இரண்டு மாடுகள் இறந்துவிட்டன. குவாரி நிர்வாகத்தினரிடம் இது குறித்து முறையிட்டோம். ஆனால், அவர்கள் அதனை

கண்டுகொள்ளவில்லை. மழை பெய்யும்போது தூசுகள் பறந்து ஓடையில் விழுந்து நிலத்தடி நீர் பாதிப்படைகிறது மற்றும் துர்நாற்றம் வீசுகிறது. இவற்றால் காய்ச்சல். தலைவலி ஆகியவை எற்பட்டு அதிக பாதிப்படைகிறோம். எங்களது வாழ்வதாரமும் இதனால் பாதிப்படைகிறது. எனவே, இக்குவாரி திட்டம் வேண்டாம் என தெரிவித்துக்கொள்கிறோம்.

**2. திரு.தசரதன், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. தசரதன் அவர்கள், குவாரியின் செயல்பாட்டால் தூசுக்கள் எழும்பி புற்கள், தென்னை செடிகள், மாஞ்செடிகள் ஆகியவை பாதிப்படைகிறது. எனவே, இக்குவாரி திட்டம் தேவையில்லை மற்றும் இதனை அனுமதிக்கக்கூடாது. குவாரியில் வெடிவைப்பதால் அருகிலுள்ள வீடுகளில் விரிசல் எற்படுகிறது, இதுகுறித்து நாங்கள் மனு வழங்க உள்ளோம். இக்குவாரியானது அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**3. திரு . ஈஸ்வரன், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. ஈஸ்வரன் அவர்கள், 5 ஏக்கர் மாந்தோட்டம் முழுவதும் தூசு படிந்து பாதிப்படைந்துள்ளது மற்றும் பட்டு வளர்ச்சியும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்தார். வெறும் காய்ந்த மரங்களால் எங்களுக்கு எவ்வித பயனுமில்லை மாறாக நஷ்டமே ஏற்படுகிறது. குவாரியில் வெடி வைப்பதால், எங்களது நிலத்தில் கற்கள் விழுகிறது மற்றும் தூசுகளால் படிகிறது. இதனை GREEN NET கட்டி எப்படி தடுக்க முடியும்? எனவே, எங்களை பாதிக்காத வகையில் குவாரியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**4. திரு. மார்க்கண்டன், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. மார்க்கண்டன் அவர்கள், குவாரி இயக்கத்தின் போது, தூசு வராமல் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். குவாரியில் வெடி வைக்கும்போது, அதிகளவில் சத்தம் வராமல் இயக்குமாறு கேட்டுக்கொண்டார். குவாரி

நிர்வாகத்தினர், பல கோடி மூதலீடு செய்து தொழில் செய்து வருகின்றனர். எனவே, மேற்கூறியவற்றை சரிசெய்து குவாரியை இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**5. திரு. செந்தில் குமார், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. செந்தில் குமார் அவர்கள், குவாரியில் வெடி வைக்கும் போது முன் எச்சரிக்கை செய்யப்பமால் வெடி வைக்கின்றனர். குவாரி அருகில் 100 மீட்டர் தொலைவில் வீடு இருப்பதாகவும் அதனால் அதிகளவு பாதிப்பு அடைந்துள்ளதாக தெரிவித்தார். மேலும், வீடுகளில் அதிர்வு ஏற்படுவதால் குழந்தைகள் பாதிப்படைகின்றனர்.

**6. திரு. பெருமாள் ராஜ், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. பெருமாள் ராஜ் அவர்கள், பூந்தோட்டம் மற்றும் அருகில் விவசாயம் செய்து வருவதாக தெரிவித்தார். குவாரியின் இயக்கத்தால் எவ்வளவு செலவு செய்தாலும் வெள்ளாமை வருவதில்லை. எனவே, இங்கு குவாரி வருவதை தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**7. திரு. முருகன், முல்லையூர்:**

திரு. முருகன் அவர்கள் வீட்டில் சீம்மாடுகள் வளர்ப்பதாகவும் மற்றும் மாடுகள் அங்குள்ள புற்களில் தூசு படிந்துள்ளதால் புற்களை உண்பதில்லை, உடல்நலம் பாதிக்கப்படுவதாகவும் மற்றும் தண்ணீரும் அருந்துவதில்லை. இதனால் மாடுகள் குறைந்த அளவில் மட்டுமே பால் வழங்குகின்றன. எனவே, இக்கிரஷருக்கு அனுமதி வழங்கக்கூடாது என கேட்டுக்கொண்டார்.

**8. திரு. பரசு ராமன், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. பரசு ராமன் அவர்கள், , மாஞ்செடிகள் பாதிப்படைக்கின்றன. ஆடி மாதம் முழுவதும் காற்று வீசுவதால் தூசுகள் பறந்து மாமரத்தின் பூக்கள் உதிர்கின்றன

மற்றும் தூசுகள் பறந்து மரங்கள் வெள்ளை நிறத்தில் காட்சி அளிக்கின்றன மற்றும் வீடுகளிலும் அதிகளவில் தூசு படிகிறது என்று கூறினார்.

**9. திரு. முனுசாமி, கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. முனுசாமி அவர்கள், நிழற்பட விளக்க கண்காட்சியில் வடக்கு – தெற்கு திசையில் காற்று வீசுவதாக கூறுகிறார்கள். ஆனால், அனைத்து திசைகளிலும் காற்று வீசுகிறது. மேலும் ஆடி மாதத்தில் ஊருக்குள் மண் வருகிறது என்று கூறினார்.

**10. திரு. M. முனிராஜ், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. M. முனிராஜ் அவர்களின் மல்பெரி தோட்டத்தின் பாதிப்பு குறித்து முதல்வரி முகவரி, விவசாய குறைதீர்ப்பு கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகம் ஆகியவற்றில் பலமுறை மனு வழங்கியுள்ளதாக தெரிவித்தார். ஆனால் எங்கள் விளை நிலத்திற்கு எவ்வித பாதிப்புமில்லை என்று கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவீட்டாளர் ஆகியோர் அறிக்கை வழங்கி உள்ளனர். ஆனால் குவாரி அருகில் இருக்குபோழுது, எப்படி பாதிப்பில்லாமல் இருக்கும். எனவே, எங்கள் ஊருக்கு குவாரி தேவையில்லை. நாங்கள், குவாரிக்கு எதிராக மனு கொடுக்கும் பொழுது பெயரளவிற்கு Green net கட்டி விடுகிறார்கள். ஆனால், பாதுகாப்பு இல்லாமல் வெடி அதிகமாக வைக்கின்றனர். மேலும், வீடுகள் அதிர்வடைகின்றன, ஆழ்துளை கிணறுகளும் பாதிப்படைகின்றன. கொண்டநாயனப்பள்ளி, சென்னசந்திரம், முல்லையூர் முழுவதும் விவசாயம் மட்டுமே வாழ்வாதாரமாகும் அது பாதிப்படைகிறது. மூன்று நான்கு வருடங்களாக இதே பிரச்சனைக்காக போராடி வருகிறோம். அனைத்து கிராம மக்களும் இதனால் பாதிப்படைந்துள்ளனர். எனவே, இங்கு கிரஷர், குவாரி தேவையில்லை என்று கூறினார்.

**11. திருமதி. லட்சுமி, கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திருமதி. லட்சுமி அவர்கள், அருகிலுள்ள குவாரியால் குழந்தைகள் பாதிப்படைகின்றனர். அதிகளவில் தூசு மற்றும் சத்தம் வருகிறது. மேலும், காற்று, நீர் அதிகமாக மாசுபடுகிறது என்று தெரிவித்தார்.

**12. திரு. போஜைராஜ், கொண்டநாயனப்பள்ளி கிராமம்:**

திரு. போஜைராஜ் அவர்கள், குவாரியிலிருந்து 50 மீட்டர் தொலைவில் மாந்தோட்டம், தென்னந்தோப்பு, மாடு வளர்ப்பு மற்றும் விவசாயம் செய்து வருகின்றோம். குவாரியால் அனைத்து விவசாயிகளும் பாதிப்படைக்கின்றனர். எனவே, இக்குவாரி திட்டம் தேவையில்லை என்று கூறினார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.

மேலும், தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 45 மனுக்கள் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில்

பெறப்பட்டது மற்றும் மின்னஞ்சல் மூலமாக எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**<br>**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**<br>**ஓசூர்** | **வருவாய் கோட்ட அலுவலர்**<br>**கிருஷ்ணகிரி** | **மாவட்ட ஆட்சியர்**<br>**கிருஷ்ணகிரி** |